RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s333

OPEN ACCESS

# சாத்திரங்களைத் தகர்த்தெறிந்த பெண் வெட்டியான்களின் வாழ்வியலை விளக்கும் தகனம் நாவல்

**ச. யோகேஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Cremation Novel that Describes the Life of the Female Scavengers Who Destroyed the Characters

**S. Yogeswari** [a, *]

[a] Department of Tamil, Chellammal women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: yogeswari1810@gmail.com

Received: 13-04-2021
Revised: 21-04-2022
Accepted: 03-05-2022
Published: 16-07-2022

Check for updates

## ABSTRACT

Our society is developing and growing fast in all aspects like civilization, scientific knowledge and economy. But it is a fact that a particular division of people in the society is still suffering and they are not able to come out from their dejected situation of life considered as the underclass people. A compass in the ship is a device which helps the sailor to show the directions and guides him to reach the shore safely when he is in the mid of the sea. Likewise, literature is a device which guides the good path to the people who lives in this universe. Literature is like a glass which reflects on the society. and it is also called as the treasury vault for our civlized culture. In Tamil literature, the novels register the congregation's history. Most of the novels throws a light on the happenings of realism. but the novels majorly focus on the overall biological life of the underclass people by detailing their cultural positions, social existence, habituation, relationship status, professional system and their problems. this research paper or essay analyses on the life of the cremators, whose entries are very rarely unseen and updated among this novel.

**Keywords:** Cremation Novel, Female Scavengers, Civilization, Underclass People

## முன்னுரை

காலங்காலமாக சமூகம் பெண்களின் பெருமைகளைப் பேசித் திரிந்தாலும் ஏதோ ஒரு மூளையில் அவளின் மென்மைத் தன்மையையும், மாதவிடாய் பிரச்சனையையும் காரணம் காட்டி முடக்கி வைக்கத் தான் முயற்சி செய்கின்றனர். வீசும் தென்றல் தான் வீறுகொண்டு புயல் ஆகும் என்பதை அறியாதவர்கள் இல்லை. புறமுதுகிட்டுத்தான் இறந்தான் என்பது உண்மையானால் அவன் உண்ட முளைப்பாலினை அறுத்தெறிவேன் என வெகுண்டெழுந்த பெண்ணை சங்ககாலம் வணங்கி மகிழ்ந்ததே தவிர அவளின் கையில் வாளைக்கொடுக்க மறுத்துவிட்டது. அரசன் என்றும் பாராமல் என் கணவர் கள்வனா? என வினா எழுப்பியதால் தான் கண்ணகி இன்றளவும் பேசப்படுகிறாள். சரித்திரம் படைக்கக் காத்திருக்கும் பெண்களுக்குச் சாத்திரங்களின் பெயரிலும் சம்பிரதாயங்களின் பெயரிலும் பல முட்டுக்கட்டைகளைப் போட்டாலும் அதனைக் கட்டுடைத்து களம் காண வைத்தது சமகால இலக்கியங்கள் தான் என்றால் மிகையாகாது. "பெண் தொழிலாளர்களாக மாற்றம் பெறுவது அவர்களது விடுதலைக்குத் திறவு கோலாகும்." என்பார் (Govindasamy Nataraj, 1998). இச்சமூகம் பெண்களுக்கு என்று ஒதுக்கிய வேலைகளைச் செய்யும் போதே பல இன்னல்களைச் சந்திக்கும் சூழலில் வெகு காலமாக

ஆண்கள் மட்டுமே செய்து வந்த வெட்டியான் தொழிலைச் செய்யும் பெண்ணின் நிலையை எடுத்துரைப்பதாக அமைந்த நாவல் தான் ஆண்டாள் பிரியதர்ஷினி எழுதிய தகனம் (Andal Priyadarshini, 2019). இந்நாவலின் வழி அறியலாகும் வெட்டியான் தொழிலைச் செய்யும் பெண்ணின் தொழில், உடல் மற்றும் பொருளாதாரம் சார் பிரச்சனைகளை எடுத்தக் கூறுவதாக இந்த ஆய்வுக் கட்டுரையானது அமைகின்றது (Andal Priyadarshini, 2019).

## சுடுகாடு

உலகம் உருவான காலம் முதல் இன்றைய நாள் வரையில் ஆண், பெண், குழந்தை என்ற வேறுபாடு இல்லாமல் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் சமத்துவத்தைக் கடைப்பிடிக்கும் ஒரே இடம் சுடுகாடு தான். மனிதனின் பார்வைக்கு மட்டுமல்ல கருத்துக்கும் எட்டிராத ஒரே இடம் சுடுகாடு தான். மனிதன் செய்யும் வேலைகளிலேயே ஆகக் கடைசி வேலை மனிதமலம் அள்ளுவது தான் என்று நினைத்திருந்த வேளையில் அதைவிட ஒரு படி மோசமான நிலையில் உள்ள வேலைதான் வெட்டியான் வேலை என்பதை இந்த தகனம் நாவல் உணர்த்துகின்றது. "உலக வாழ்வின் உச்சம் அரச போகம் என்றால் அதன் ஆகக் கடைக்கோடி வாழ்க்கை மயான பூமி வாழ் வெட்டியான் ஜீவிதம் தான். அதனால் தானோ என்னவோ அரிச்சந்திர ராஜா வெட்டியானாகவும் வாழ்ந்து காட்டினான் என்று புராணக் கதை சொல்லும்" என்கிறார் ஆண்கள் வெட்டியான் வேலை செய்வதே கடினமாக இருக்கும் சூழலில் பெண்கள் இந்த வேலை செய்வதைக் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை (Andal Priyadarshini, 2019).

## சுடுகாடும் பெண்களும்

பலநூறு நூற்றாண்டுகள் கடந்த இவ்விலக்கிய உலகமானது பெண்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிலர் என்பதைத்தான் காட்டுகின்றது. சீவக சிந்தாமணியில் மயிற்பொறியின் விசை குறைந்ததால் தான் சுடுகாட்டில் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது விசயைக்கு. கணவனும் இன்றி யாருடைய உதவியும் கிடைக்காத காரணத்தால் தான் சந்திரமதி சுடுகாட்டிற்குச் சென்றாள். இடைப்பட்ட காலத்திலே நம்மிடம் சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் தான் பெண்கள் சுடுகாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் விருப்பத்தோடு சிலர் சென்றிருந்தாலும் கட்டாயத்தின் பேரிலும், கைம்பெண் வாழ்க்கையை வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என எண்ணியதும் தான் காரணமாக இருந்திருக்க முடியும்.

இவ்வழக்கமானது ராஜாராம் மோகன்ராயின் பெரும் முயற்சியால் 1892-ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது. அதுமுதல் பெண்ணானவள் யார் இறந்தாலும் வீட்டு வாசலோடு திரும்பிச் செல்லும் வழக்கமானது கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்கள் சுடுகாட்டிற்குச் செல்வது என்பது நம் சம்பிரதாயங்களிலே இல்லாத செயலாக மாறிவிட்டது. தற்காலத்தில் ஏவுகணைகளில் பறந்து சில பெண்கள் வியப்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சூழலில் சுடுகாட்டிலும் கூட சில பெண்கள் வேலை செய்தும் வியப்பில் ஆழ்த்துகின்றனர். சமுதாயத்தைக் காட்டும் காலக் கண்ணாடி இலக்கியம் என்பார்கள். ஆனால் மேல்நிலையாளர்கள் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை இருட்டடிப்பு செய்கின்றனர். என்பதனை, "சிலரை வானளாவத் தூக்கி வைத்தனர், சிலரை அதல பாதாளத்தில் அமிழ்த்திவிட்டனர்... எத்தனையோ அழகுகள் இந்த மண்ணிலே உள்ளன. ஆனால் அவை தீண்டாத வசந்தங்களாக" இருக்கின்றன (Kalyana Rao, 2004). இவற்றை எல்லாம் மாற்றி அமைக்கும் விதமாக ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் சுடுகாட்டிற்குச் சென்று வெட்டியான்களின் இன்ப துன்பங்களைக் கள ஆய்வு மேற்கொண்டு அதிலேயும் ஒரு பெண் வெட்டியானாக இருந்தால் எவ்வளவு துயரினை அடைகின்றனர் என்பதைப் படம் பிடித்துக் காட்டும்படி தகனம் நாவலை இயற்றியுள்ளார். விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை உணர்த்தும் எழுத்துக்கள் "மேட்டிமைச் சமூகத்தின் பங்கையும் பாத்திரத்தையும் புறவயமாக மதிப்பிடுவதும் அவர்களின் பங்கு குறித்த மேட்டிமைப் பார்வைகளை விமர்சனத்திற்குள்ளாக்குவதும் விளிம்புநிலை ஆய்வின் கூறாகவே அமையும்" என்ற கூற்றின் படியும் இந்த நாவலானது அமைந்துள்ளது.

## தொழில்சார் பிரச்சினைகள்

பிணம் எரித்தல் என்பது மற்ற பொருட்களை எரிப்பது போன்றது அன்று. ஒவ்வொரு பிணமும் ஒவ்வொரு வகையாக எரியும். பிணத்தினை எரிக்கும் போது அதிலிருந்து நாற்றம் வீசக் கூடிய திரவம் தெறிக்கும் என்பதனை, "எரிந்துகொண்டிருந்த பிணத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய திரவம் இவன் மீது தெளித்து விழுந்தது. துர்நாற்றம் வயிற்றைப் புரட்டியது. குமட்டியது. குடல் வெளியே வந்து விடும்படி ஓங்கரிப்பு வந்தது." என்ற வரிகளின் மூலம் விளக்கியுள்ளார் (Andal Priyadarshini, 2019). "பிணம் எரியும்போது பக்கத்திலேயே இருந்து எரிக்க வேண்டிய பிணங்களும் உண்டு. இறந்தவன் பிறப்பு தலைச்சானாக இருந்தால் மட்டுமே இப்படி. தலைச்சன் பிணம் எரிக்கும் போது பாத்தியப்பட்டவர்கள் உடனிருந்து எரிப்பதற்கு காரணம் தலைச்சனின் மண்டை ஓட்டை மாந்திரீகத்திற்கு எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள் என்கின்ற நம்பிக்கையே." என்கிறார் கி. ராஜநாராயணன். "தண்ணீரில் விழுந்து செத்த பிணம் வேகும்போதே, நாம் கனவு கண்ட அதிர்ச்சியில் எழுந்து உட்காருவது போல அது எழுந்து உட்கார்ந்து விடும். வெட்டியான்கள் அறிவார்கள். உருட்டுக் கம்பால் ஒரு போடு. வைதுகொண்டே போட்டு படுக்க வைத்து எரிப்பார்கள். குப்புறப் போட்டு எரித்தால் எழுந்திருக்காது." இவ்வாறாகப் பிணத்தை எரிக்கும் போது பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றது (Andal Priyadarshini, 2019).

பிணத்தை எரித்தால் தானே பிரச்சனை புதைத்தால் பிரச்சனை இல்லை என்று கூறிவிட முடியாது. குழி வெட்டுவது ஒருபுறம் கடினம் என்றாலும் அந்தக் குழிக்குள் பிணத்தை இறக்குவது அதைவிட கடினமான செயலாக அமையும் என்பதை நாவலில், "தொட்டிலுமாதிரி சின்னதா வெட்டியாச்சு. சின்னதுன்னாலும் பொணம் கணக்குமே. 'தம்' புடிச்சு என்னால குழியில எறக்க முடியாது (Andal Priyadarshini, 2019)." எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அறிவழகன் இயற்றிய கழிசடை என்ற நாவலிலும் பிணத்தினைப் புதைப்பதற்காக குழியை வெட்டுவது எவ்வளவு கடினமானது என்பதனை, "குழிவெட்டறதுன்னா. ஒங் இஷ்டத்துக்கு இல்லப்பா. அவங் அவங் சாதி வழக்கப்படி வெட்டியாவனும். நீட்டிப் போட்ற குழியவிட. ஒக்காரவைக்கற குழியிருக்கே அதுதான் கஷ்டங். அனுபவம் வேணும். எடமும் அகலமா இருக்கணும். அப்பப்ப குழிக்குள்ளார ஒக்கார்ந்து பார்த்து வெட்டணும் (Arivazhakan, 2014)."

வெட்டியான் பெரும்பாலும் நேர்வழியில் வருகின்ற பிணங்களைத் தான் எரிப்பார்கள் என்றாலும் சில சமயங்களில் நீதிக்குப் புறம்பாக வரும் பிணங்களையும் எரிக்க வேண்டிய சூழல் எழுகின்றது என்பதனை, "ஏதோ பொணத்தைக் கட்டாயமா எரிக்க வச்சிருக்காங்க. எல்லாம் முடிஞ்சப்புறம் எங்கப்பாரை உருட்டுக் கட்டையால் அடிச்சுப் போட்டிருக்காங்க (Andal Priyadarshini, 2019)." "பொம்பளப் புள்ளிங்களை இவனுங்க சொகத்துக்கு மோந்துப் புட்டு பிரச்சனையாயிரக்கூடாதுன்னு எரிக்க வக்கறதே இவனுங்களுக்குப் பொழப்பாயிருச்சு (Andal Priyadarshini, 2019)." "நாளைக்கே இந்த ரவுடிக் கும்பல் என்னை மெரட்டினாநா எப்படி எதிர்த்துப் பேச? பொட்டச்சியால ராட்சசக்கும்பலைச் சமாளிக்க ஏலுமா? உருட்டுக்கட்டை, குண்டாந்தடி, சைக்கிள் செயினுன்னுவாரவுகளை என்ன பண்ண? எங்க உசிருக்கு என்ன சார் ஜவாப்பு? ஏழைபாழைங்க உசிருன்னா அம்புட்டு சல்லிசாப்போச்சா?", என்று ஆசிரியர் ஆழமாகப் பதிவு செய்துள்ளார் (Andal Priyadarshini, 2019).

பிணங்களை எரிப்பதில் புதைப்பதில் பல சிரமங்களைச் சந்திக்கும் வெட்டியான்கள் சில சமயங்களில் புதைத்தப் பிணங்களைத் தோண்டி எடுக்க வேண்டியுள்ளது. அது சாவுக்கே சவால் விடும் செயலாக உள்ளது. குற்றவியல் பிரிவில் சந்தேகத்திற்கு இடமாக இருக்கும் பிணங்களைப் புதைத்துப் பல ஆண்டுகள் ஆனாலும் தோண்டி எடுக்க வேண்டும். ஓரிரு நாட்கள் ஆனாலே பிண வாடையைத் தாங்க இயலாது. இதில் சில நாட்களான சிதைந்தப் பிணங்கள் என்றால் அதை வார்த்தைகளால் கூட விவரிக்க முடியாது அவ்வளவு கொடுமையான அனுபவமாக இருக்கும். ஆண்டாள் பிரியதர்ஷினி படைத்த தன் தகனம் நாவலில் ஒரு பெண் வெட்டியான் பிணத்தைத் தோண்டி எடுக்கும் காட்சியினை மிகவும் உருக்கமாக வடிவமைத்துள்ளார். அவை "குழி ஓரடி ஒன்றரையடி ரெண்டடி என்று ஆழம் அதிகமாக அதிகமாக நாற்றத்தின் அடர்த்தியும் ஜாஸ்தியானது. குடல் புரட்டிக் கொண்டு வந்தது. மார்புக்கூடு பெயர்த்தெடுத்து வாய் வழியே நாக்கு தள்ளி வெளியே விழுவது மாதிரி இருந்தது. வாயெல்லாம் நுரைத்தது. ரெண்டு நாள் அழுகின செத்த எலி நாற்றமே ஊரெல்லாம் மூக்கை மூட

வைக்குமே இது எவ்வளவு கொடுமை.? பிணம் ரெண்டாம் நாளே அழுகி நாறும் போது இது புதைக்கப்பட்ட பிணக்குழி நாற்றத்தின் வீரியம் சும்மாவா? மனிதக் கழிவு, அழுகிய முட்டை, செத்த பிராணி, குப்பைக்கூளம், புழுவும் பூச்சியுமாய் நாறும் சாக்கடை சகலமும் சேர்ந்த கலவை நாற்றம் அங்கே. நெளி நெளிவாய்ப் புழுக்கள் வேறு அவற்றின் நாற்றமும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெளியே கிளம்பி கொத்துக்கொத்தாய் முடிச்சு முடிச்சாய் சாரை சாரையாய் நெளிந்தன. மண்ணைக்குடைந்தன." "நாக்குவறண்டது. தாகம் வாட்டியெடுத்தது ஆனால் ஒரு சொட்டுக் கூட குடிக்க முடியாது. அடி நாக்கின் மேல் அண்ணத்தின், குடலின், உயிரின், நுனி வரைக்கும் நாற்றத்தின் வாசனைத்துளி பச்சக்கென்று ஒட்டிக் கொண்டிருந்தது." என்பதாகும் (Andal Priyadarshini, 2019).

ஆண்களே செய்யப் பயப்படும் வேலையை இன்றையக் காலகட்டத்தில் பெண்கள் துணிந்து செயல்படுத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரிய செய்தியாகும். தன்னுடைய உயிரையே பணயம் வைத்து வேலை செய்யும் வெட்டியான்களின் சிரமங்களை யாரும் கூட இருந்து தெரிந்து கொள்ளும் அனுபவம் கிடைப்பதில்லை. அதனால் தானோ என்னவோ வெட்டியான்களின் வாழ்க்கைச் சிரமங்கள் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாமலேயே இருக்கின்றன.

## உடல்சார் பிரச்சனைகள்

ஒவ்வொரு தொழிலைச் செய்யும் மக்களுக்கும் அவர்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்ற மாதிரியான உடல் உபாதைகள் இருக்கத்தான் செய்கின்றன. இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்வோருக்கு உறுப்புகளை இழக்க நேரிடுகின்றது. அணு உலைகளில் பணிபுரிபவர்களுக்கு கேன்சர் என்னும் பெரும் நோய் வர வாய்ப்புள்ளது. இவ்வாறான உயிர்போகும் அபாயங்கள் இருந்தாலும் அரை சாண் வயிற்றுக்காகச் செய்ய வேண்டிய சூழ்நிலைகள் எழுகின்றன. வெட்டியான்களின் தொழில்களிலும் உயிருக்கும் உறுப்புக்கும் கேடுவிளைவிக்கும் ஆபத்துக்கள் பல உள்ளன. அவற்றைத் தகனம் நாவலில் ஆசிரியர் பதிவேற்ற மறக்கவில்லை. சற்று அளவுக்கு அதிகமான நாற்றத்தை நாம் பொணம் நாத்தம் அடிக்குது என்போம் ஆனால் வெட்டியான்களின் வாழ்வியலானது அந்த நாற்றத்துடனேயே கழிகின்றது. இதனை, "உவ்வேவ்என்று ஓங்கரித்தான். கிறக்கமாய் வரவே கையிலிருந்த வெட்டிக்கம்பைப் பிடித்தபடிக் குத்துக்காலிட்டு உட்கார்ந்தான் சின்னராசு" "காற்றை நிறைத்த துர்நாற்றத்தில் சுவாசிக்கவே முடியவில்லை அவனால். தலைசுற்றிக் கண் இருண்டு மயக்கமாய் வந்தது." என்ற வரிகளில் பதிவு செய்துள்ளார் (Andal Priyadarshini, 2019). இவ்வாறான நாற்றத்தை அதிக அளவில் சுவாசிப்பதால் நுரையீரல் தொற்று ஏற்பட்டு விரைவில் இறக்கும் நிலைமைதான் ஏற்படும்.

ஒரு மனிதனால் அதிக படியாக ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம்தான் வேலை செய்ய முடியும் அதற்கு மேல் பணிச்சுமையை உண்டாக்கக் கூடாது என்று தொழிற்புரட்சியின் முடிவில் காரல்மார்க்ஸ் தீர்மானம் நிறைவேற்றினார். ஆனால் ஒரு பிணத்தை முழுமையாக எரித்து முடிக்க பன்னிரண்டு மணி நேரத்திற்கு மேலாகும் என்பதனை நாவலின் வழி அறிய முடிகின்றது அதனை, "நேத்துச் சாயங்காலம் ஏழு மணிக்கு சிதைல எத்துனது இதோ சூரியன் உச்சிக்கு வந்துட்டான். ராவெல்லாம் காத்து அணைச்சுது. காலைல மழை மூட்டம் இப்பத்தான் பத்திச்சு. நாஸ்டாதுன்னலே, டீ தண்ணி கூடக் குடிக்கல மயக்கமா வருது." என்ற வரிகளின் மூலம் உணரமுடிகின்றது (Andal Priyadarshini, 2019).

சிதையினை எரிக்கும் போது அளவுக்கு அதிகமான நெருப்பு சுடுவதோடு அந்தச் சிதையினைத் திருப்பிப் போடும் போது சாம்பலானது பறந்து கண்களில் விழுவதால் நாளடைவில் கண் பார்வையை இழக்கும் நிலைக்கூட ஏற்படுகின்றது இதனை, "இன்னும் எத்தினி நாளுக்குப் பார்வை இருக்கும்னு தெரியல்ல…கண்ணு அவிஞ்சிபோயி அப்பனுக்கு வாரிசா பக்கத்துல குந்தப் போறேனோ என்னவோ? மிஞ்சிப்போனா ரெண்டு வருஷம். சாம்பல் அடிச்சு அடிச்சுக் கண்ணு போனதுதான் மிச்சம்." என்ற வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது (Andal Priyadarshini, 2019).

பிணத்தைத் தோண்டி எடுக்கும் பொழுது பல விபத்துகளும் நடக்க வாய்ப்புள்ளது. நாற்றம் தாங்காமலும், அருவெறுப்பின் காரணமாகவும் புழுக்களின் தொற்றினாலும் இறப்பு நேர கூட

வாய்ப்புள்ளது. இத்தனைத் துன்பங்களைத் தாண்டியும் வேலைசெய்யும் வெட்டியானின் இன்னல்களைத் துளியும் உணராமல் வேலையைத் துரிதப்படுத்துவதில் அதிகாரிகளும், உறவினர்களும் இருப்பது மனித நேயம் செத்துவிட்டதா? எனச் சிந்திக்கத் தான் வைக்கின்றது. இதனை, "நீட்டின கையைப்பிடித்து எக்கினான் சுரேசு. பாதி ஏறும்போது மண் பாளமாய்ப் பிளந்து அவன் முகத்தில் விழுந்தது. கண்களில் விழுந்தது. மூக்கில் விழுந்தது. திறந்திருந்த வாயில் விழுந்தது. உடம்பு அருவருப்பில் சிலிர்த்தது. கை நழுவியது. பதறிப்பதறித்தாவி மண்ணைப்பிடிக்க சம்பத்தின் கையைப் பிடிக்க நிமிஷத்தில் எல்லாமே கைநழுவ தலைகுப்புறக் கீழே விழுந்தான் சுரேசு. கொழகொழவென்றிருந்த சேற்று மண், நசநசத்த புழுக்கள், அழுகின பிணத்தின் சதை எல்லாம் கலந்த மண்ணில் முகம் அழுந்தப் போய் விழுந்ததில் அடுத்த நிமிஷமே மயக்கமானான் சுரேசு." "என்னா சார் அநியாயம்? பொணத்தை எடுத்துப்போட்டாச்சு (Andal Priyadarshini, 2019). அந்தப் பையன் சுரேசு பள்ளத்துல விளுந்துட்டான் சின்னப் பையன் சார். அவனைக் தூக்க ஒரு வழியும் பண்ணலே சீக்கிரம் சீக்கிரம்னு அவசரப்படுத்தறீங்களே. பசி மயக்கம் வேலை மயக்கம் எல்லாமாய் சேர்ந்து வாய் குழறினாள் சின்ன பொண்ணு." என்ற செய்திகளின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது (Andal Priyadarshini, 2019).

சில சமயங்களில் ஆஸ்பத்திரி சடலங்களில் உறுப்புக்களுக்குப் பதில் கண்ணாடி, பாட்டில் போன்ற பொருட்களை வைத்துத் தைக்கின்றனர். அத்தகைய பொருட்கள் எரிக்கும் போது வெடித்துச் சிதறுவதால் பல விபத்துகள் நிகழ்கின்றன இதனை நாவலில், "ஐயோ எரியுதே கண்ணு அவிஞ்சி போச்சே கண்ணு எரியுதுக்கா உசுறு போவுது ஏய் சம்பத்து என்னாச்சு? வெட்டிக் கம்பாலக் குத்திக்கிட்டியா...? பாய்ந்து அவனைப் பிடித்தாள். வலி தாங்காமல் துடித்தான். துள்ளினான். பாட்டிலு பாட்டிலு வெடிச்சிருச்சுக்கா. கண்ணுல பாய்ஞ்சிருச்சு பாரு வலிக்குது. உசிரு போவுதுக்கா கையெல்லாம் கொளகொளவென்று ரத்தம் வழிந்தது. மூடியிருந்த அவனின் கையை விலக்கினாள். நடுவிரல் அளவுக்கு தடித்த கண்ணாடித் துண்டு கண்ணைக் கிழித்துச் சொருகி நின்றிருந்தது. கண்ணை இமைக்க முடியாமல் கொட்டும் ரத்தத்தை நிறுத்த முடியாமல் துடித்தான். கதறினான். ஆஸ்பத்திரி சடலமாயிற்றே உள்ளே வைத்துத் தைத்திருந்த பாட்டில் வெடித்துக் கண்ணில் பாய்ந்திருக்கிறது. வலது கண்ணின் கருவிழியில் சிதைத்துச் செருகியிருந்தது." என்ற வரிகளின் மூலம் தெரியப்படுத்தி உள்ளார் (Andal Priyadarshini, 2019).

நாம் வேலைக்குச் செல்வதும், தொழில் தொடங்குவதும் எதற்காக என்றால் அதன் மூலம் நமக்கு இச்சமூகத்தில் நல்ல மதிப்பும், மரியாதையும் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், அதன் மூலம் ஈட்டும் பொருளாதாரத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்காகவும் தான். ஆனால் வெட்டியான் தொழிலைச் செய்பவர்களுக்கு மதிப்பு மரியாதையும் கிடைக்காவிட்டாலும், தேவையான அளவிற்கு பொருளாதாரம் கிடைக்கவில்லை என்றாலும் சகித்துக் கொள்ள தயாராக இருக்கும் அவர்களுக்கு உயிர் மிஞ்சுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

## பொருளாதாரம்சார் பிரச்சனைகள்

உலகம் அனைவருக்கும் பொதுவானது ஆனால் வாழ்க்கை முறைகள் தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமானது. பணம் இருப்பவன் பல்லக்கில் ஏறுகின்றான் பணம் இல்லாதவன் பல்லக்கைச் சுமக்கிறான். சேற்றில் கால் வைப்பவனால் சோற்றில் கைவைக்க முடியவில்லை. என்றைக்குமே பட்டுத்தறிக்குச் சொந்தக்காரன் வீட்டில் கட்டிக்கொள்ள நல்ல துணி கிடைக்காது. நகை செய்து தருகிறவனுடைய வீட்டுகாரிக்கு ஒரு மூக்குத்தி போட்டுக் கொள்ள முடியாது. கறிகாய் வியாபாரி வீட்டில் சொத்தைக் கத்திரிக்காய் குழம்பு, இப்படித்தான் சுழன்று கொண்டிருக்கிறது உலகம். பொருளாதாரம் இன்றி விளிம்பு நிலையில் வாழக் கூடிய மனிதர்களுக்கு அடிப்படைத் தேவைகள் கூடப் பூர்த்தி ஆவதில்லை. இராப் பகலாக கண் விழித்து உயிரையும் பணையம் வைத்து பிணங்களை எரிக்கும் வெட்டியானின் வயிற்றுக்கு வாக்கரிசி மட்டும் தான் உணவு என்றால் எத்தனை நாட்கள் விறகெரியும் அவனுடைய வீட்டில். இறந்தவன் யாராக இருந்தாலும் தன்னுடைய உறவினர் போல் எண்ணி உடலை எரிக்கும் வெட்டியானுக்கும் வயிறு உண்டு என்பதனை ஒருவரும் எண்ணிப்பார்ப்பது இல்லை. மனிதனின் இறுதி பயணத்தைச் சிறப்பாக முடித்து வைக்கும் வெட்டியான்களுக்குக்

கிடைக்கும் கூலி வாக்கரிசியும், காக்கா பலகாரமும், நூறு அல்லது நூற்றைம்பது ரூபாய் மட்டும் தான் இதனை, “இப்பப் பரவாயில்லை. பெரிசு எரிக்க நானூறு ரூவாக் கூலி வரட்டி, கெரசின், கட்டையெல்லாம் போவ நூத்தம்பது ரூவாயாச்சும் கைல நிற்கும். இந்த வார ரேசனுக்காச்சு” , “அம்மா அரிசி எடுத்தாரச் சொல்லிச்சாம். நல்லவேளை நினைப்பூட்டின. அந்தா பாரு பொட்டலம். நல்ல மனுசங்க. அஞ்சு கிலோ அரிசியாச்சும் தேறும்” என்ற வரிகளில் பதிவு செய்துள்ளார் (Andal Priyadarshini, 2019).

வெட்டியான்களுக்குப் பிணத்தை எரித்தால் தான் பணம் கிடைக்கும் வாழ்க்கை நடத்த முடியும். அதற்காக தினமும் யாராவது சாக வேண்டும் என வேண்டிக் கொள்ளவா முடியும் என்ற கேள்வியை மிகவும் ஆழமாக நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். அவை, “இன்னம் எத்தனை காலத்துக்கு இப்படி நரகலும் அழுகலும் நெருப்பும் பொணமுமாய்ப் பாடுபட? யாராச்சும் மண்டையப் போட மாட்டார்களா? பொணம் வராதா? வூட்டுல அடுப்பெரிக்கலாமே. இப்பிடிக் கேவலமாவா எதிர் பார்க்க? பசியும் பட்டினியுமே என்னைத் தின்னுத் தீர்த்துடுமோ? சோறுல கை நனைக்கப் பொணம் விழணும்னு நினைச்சா மனசுல ஈரமில்லன்னு ஆயிடுமே. மத்தவன் சாவுக்காகக் காத்திறக்கற மிருகப் பொறப்பா நானு?” என்ற வரிகளாகும் (Andal Priyadarshini, 2019).

பூமிக்கும், ஆறுக்கும் பெண் பெயர்களைச் சூட்டி அழகு பார்த்தாலும் இவ்வுலகம் பெண்களின் முன்னேற்றத்தை முழுமையாக ஒப்புக் கொள்வதில்லை. பெண் தானே என்ற ஏளனம் எல்லோரிடமும் இருக்கத்தான் செய்கின்றது. இக்கருத்தினை ஆசிரியர் தன் நாவலில் சின்னப் பொண்ணு என்ற கதாப்பாத்திரத்தின் வாயிலாக விளக்கியுள்ளார். ஒரு பெண், ஆண்கள் கூடச் செய்ய சிரமப்படும் வெட்டியான் வேலையைச் செய்கின்றாளே என வியந்து பார்க்காவிட்டாலும் தன்னுடைய தொழிலுக்குப் போட்டி என்று எண்ணாமல் இருப்பது முக்கியம். ஆனால் தகனம் நாவலில் வரும் சின்னப் பொண்ணு பெண் என்பதால் தகாத வார்த்தைக்கும், கடுமையான வேலைப் பளுவிற்கும் ஆட்படுத்தப்படுகிறாள் என்பதனை, “கடைசி ஊர்வலத்துலயே வர விடாத பொம்புளைக இன்னிக்கி பொணம் எரிக்குதுண்ணே?” (Andal Priyadarshini, 2019). “மத்த வெட்டியானுக நல்ல பொணத்தையெல்லாம் புடுங்கிக்கிறானுவ. உறவு ஜனத்துக்கிட்ட வாய்க்கரிசின்னு காசு புடுங்கிக்கறாங்க. எனக்கு மட்டும் போலீஸ் கேஸ், ரயில்பாடி, ஆக்ஸிடெண்டு கேஸ், மார்ச்சுவரி கேஸ்னு தள்ளி விடறானுங்க. அது கூட நெதமுமா கெடைக்குது? இந்த அனாதைப் பொணங்களை எரிச்சதுக்கு வாய்க்கரிசி யாருகிட்ட கேக்க?” (Andal Priyadarshini, 2019). மேற்கண்ட வரிகள் உணர்த்துகின்றன. பெண்கள் ஆண்களுக்கு நிகராக வேலை செய்தாலும் கூலி என்னவோ குறைவாகத் தான் வழங்கப்படுகின்றன என தகனம் நாவலில் ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவு செய்துள்ளதைப் போன்று பாமா அவர்கள் சங்கதி நாவலில் “ஒரே வேலைய ஆம்பளையும் பொம்பளயும் செஞ்சாக் கூட ஆம்பளைக்கு ஒரு சம்பளம், பொம்பளைக்கு ஒரு சம்பளம் தான், ஆம்பளைக்கு கொஞ்சம் கூடுதலான சம்பளம் தர்ராங்க வெளங்க மாட்டிங்குது’ எனப் பதிவு செய்துள்ளார் (Bama, 2001).

மற்ற தொழில்களைச் செய்யும் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அந்த நிறுவனமோ அரசாங்கமோ நஷ்டஈடு கொடுப்பதுண்டு ஆனால் அந்த நஷ்டஈடு பணம் கூட வெட்டியான் தொழிலில் ஏற்படும் விபத்துகளுக்குக் கிடைப்பதில்லை. இதனை, “நஷ்ட ஈடு குடுக்கல்லாம் வழி இல்ல. தெரிஞ்ச டாக்டர்ட்ட நா சொல்லியனுப்பறேன். அம்பது வாங்கற இடத்துல முப்பது வாங்கிப்பாரு. பெரிய காயம் தான். நல்லாக் கவனிங்க” “குழியினுள்ளே விழுந்த அதிர்ச்சி. கோடி கோடியாய்ப் புழுக்களின் மேல் விழுந்த அதிர்ச்சி இப்படிச் சகலமும் அவனை நிலை குலைய வைத்தாயிற்று மனசு பேதலித்துப் போயிற்று. தினக்கூலி ஜீவன்கள், மருந்து மாத்திரைக்குச் செலவு பண்ண முடியுமா? வேலையும் நிரந்தரமில்லை. ஒப்பந்தத் தொழில் மாதிரி தானே? மணிமாறன், உதவி ஏதும் பண்ண வழியில்லை. விதிகள் அனுமதிக்கவில்லை என்று கைவிரித்து விட்டார்.” என்ற செய்திகளின் வழி அறியமுடிகின்றது (Andal Priyadarshini, 2019).

ஊரின் ஒதுக்குப் புறமாக இருக்கும் சுடுகாட்டினைப் போன்று வெட்டியான்களின் வாழ்க்கையும் வெளிச்சத்திற்கு வராமலேயே இருக்கின்றன. அரசாங்கத்தின் பார்வையும் இவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. இவ்வெட்டியான்களின் அதிகபட்ச கோரிக்கை என்பது பிணத்திற்குப் பணம் என்ற நிலைமாறி மாதச் சம்பளமாகக் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்பது தான். “யாரும் மண்டையப் போடலேன்னா குடும்பத்தோட பட்டினிதான் கெடக்கணும்னா கேவலம், இந்தச் சுடுகாட்டுலேயே மாசச்

சம்பளம் போட்டுக் குடுத்தா ராவாப்பகலாக் கூட வேலை பண்ணலாம். வேலைக்குக் கூலின்னாத் தான் கஷ்டம். சோலி இல்லாத நாள்ல வவுத்துல ஈரத்துணியவா போட்டுக்க முடியும்? எத்தனையோ தரம் ஆபிஸருங்களுக்கு மனு எளுதிக் குடுத்தாச்சு. யாருமே நல்லது பண்ண மாட்டேங்கறாங்க. இந்தச் சுடுகாட்டுலேயே நானும் எரிஞ்சு சாம்பலாக வேண்டியது தான்" (ஆண்டாள் பிரியதர்ஷினி, 2019), இவ்வாறாக வெட்டியான்களின் வாழ்க்கையில் நேரம், நாள், கிழமை, பண்டிகை என்று கூட பார்க்காமல் உழைக்க நேர்ந்தாலும் மூன்று வேலை உணவு கூட முழுமையாகக் கிடைக்கவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்க வாழ்வாகத் தான் இருக்கின்றது. இக்கருத்திற்கு வலு சேர்க்கும் விதமாக வெட்டியான் குறித்து புங்கனூர் இராமண்ணா கூறியுள்ள "இவர்கள் ஆண்டு முழுவதும் கூலி பெறாமல் ஊர்ப்பொது வேலை செய்பவர்களாவார்கள். கூலி இல்லாத வேலை வெட்டி வேலையாகும். விளைச்சல் காலங்களில் சம்பளமாக நெல்லைப் பெற்றுக் கொண்டு பணி செய்தார்கள். இன்று இவர்கள் வெட்டியான் என்றும் வெட்டியாரப் பறையர் என்றும் அழைக்கப் பெறுகின்றனர் (Ramanna, 1998). தற்காலத்தில் மின் மயானங்கள் வந்துள்ள சூழலிலும் வெட்டியான்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. மின் மயானம் வந்தப் பிறகு ஆள் குறைப்பு தான் அதிகரித்தது. சொந்தத் தொழிலைச் செய்ய முடியாத அவல நிலை தான் வெட்டியான்களுக்கு எழுந்துள்ளது. நகரமாக்கப்பட்ட இடங்களில் தான் மின்மயானம் அமைக்கப்பட்டுள்ளதே தவிர கிராமப்புறங்களில் இன்னும் சாதாரண சுடுகாடு தான் நடைமுறையில் இருக்கின்றது.

## முடிவுரை

கடவுளையும், மன்னர்களையும், மக்களுள் சிறந்தவர்களை மட்டுமே கண்டு கொண்டிருந்த நம் இலக்கிய உலகம் விளிம்புநிலை வாழ் மக்களுக்கும் ஒரு வாழ்க்கை உண்டு எனப் படம்பிடித்துக் காட்டியது சமகால இலக்கியங்கள் தான். காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்ந்தாலும் மாறாத நிலைப்பாடாக உயர் வர்க்கம் தாழ்ந்த வர்க்கம் சார்ந்த மக்களின் வாழ்வியலானது தொடர்வதைப் போன்று ஆண் பெண் என்ற பேதமும் வளர்ந்து கொண்டு தான் வருகின்றன. பெண்கள் நாட்டின் கண்கள் எனப் பல முழக்கங்கள் காதைப் பிளந்தாலும் 33 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்குவதில் கூட சிரமங்கள் தான் நீடிக்கின்றன. பெண்களைத் தென்றலோடும், தாமரையோடும், அன்னப் பறவையோடும் ஒப்பிட்டு அவளை அழகுப் பெட்டகமாக மட்டும் காட்டாமல் உண்மை அறிவையும் உள்ளார்ந்த உறுதியையும் இலக்கியங்கள் வெளிப்படுத்தினால் பெண்களின் முன்னேற்றத்திற்கு மகுடங்களாகத் திகழும் என்பதில் ஐயமேதும் இல்லை. இதைத்தான் தற்கால இலக்கியங்கள் முயன்று வருகின்றன.

## References

Andal Priyadarshini, (2019) Thaganam, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Arivazhakan, (2004) Kazhisadai, Alikal Publisher, Chennai, India.

Bama, (2019) Sangathi, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Govindasamy Nataraj, (1998) Markciyam Penniyam Uravum – Muranum, Vediyal Pathipagam, Coimbature, India.

Kalyana Rao, G., (2009) Thendatha Vasantham, Southvision, Chennai, India.

Ramanna, (1998) Paraiyar Oru Varalatra Surukkam, Thatha Rettaimalai Srinivasan Arumpani Mandram, Trichy, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License